# குழந்தைகளுக்கு 'ஆட்டிசம்' பாதிப்பு
# டாக்டர் ஆலோசனை அவசியம்

கோவை, மே 18: குழந்தைகளுக்கு மூளை மண்டலத்தில் முதிர்ச்சி குறைபாடு இருந்தால் அது ஆட்டிசம் என அழைக்கப்படுகிறது. ஆட்டிசம் பிரச்னையால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கான சிகிச்சை முறைகள் குறித்து கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை மன நல மருத்துவர் டாக்டர் பரந்தாமன் சேதுபதி கூறியதாவது:

பொதுவாக பெரியவர்களுக்கு வரும் மனநோய் குழந்தைகளுக்கு எளிதில் வராது. ஆனால் குழந்தைகளுக்கு வரும் பிரச்னைகளை மூளை வளர்ச்சி குறைபாடு என தவறாக கருதுவதற்கு வாய்ப்புண்டு. இதை சரியாக கவனித்து தகுந்த வல்லுனர்களின் ஆலோசனை பெற வேண்டும்.

இவ்வகையில் ஒரு பிரச்னை தான் ஆட்டிசம் அல்லது மூளை மண்டலத்தின் முதிர்ச்சி குறைபாடு. இதில் மரபணு மாற்றங்கள் கண்டிப்பாக இருந்தாலும், பரம்பரை நோயாக வருவதற்கு வாய்ப்புகள் குறைவு.

இந்த குழந்தைகள் மற்றவர்களிடம் பழகும் விதத்தில் மாறுபட்டு இருப்பார்கள். மேலும் இவர்களுடைய தேவைகளையோ, மனதில் இருப்பதையோ மற்றவர்களிடம் வெளிப்படுத்த இயலாமை இருக்கும். இவர்கள் ஒரே வகைச் செயலில் அதிக ஈடுபாடு காண்பிக்கும் வாய்ப்புகள் உண்டு. இந்த மாற்றங்கள் ஆறு மாதம் முதல் 3 வயதிற்குள்ளாகவே தோன்றி விடும். இந்த பிரச்னை தானாக குணமடையும் வாய்ப்புகள் குறைவு. பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போது வரும் பிரச்னைகளாலோ, கர்ப்பமடையும் பொழுது பெண்கள் வயது முப்பத்தி ஐந்துக்கு மேல் இருப்பதாலோ ஆட்டிசம் வருவதில்லை.



பரந்தாமன் சேதுபதி

இந்த குறைபாட்டை சிறு வயதிலேயே கவனிக்காமல் விட்டு விட்டால் கல்வி கற்பதில், நண்பர்களுடன் உறவாடுவதில், அன்றாட வாழ்க்கையில் என எல்லா இடங்களிலும் பிரச்னை ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இவர்கள் சில நேரங்களில் துறுதுறுப்பு மிகுதியானவர்களாகவும் இருக்கலாம். மூளை வளர்ச்சி குன்றும் பிரச்னையும் இருக்கலாம்.

பொதுவாக இக்குழந்தைகளுக்கு ஆக்ரோசத்தை கட்டுப்படுத்துவதற்கு மட்டுமே மருந்து, மாத்திரை பயன்படுத்துவோம். ஆனால் ஆக்குபேசனல் தெரபி மூலம் இக்குறைபாட்டை படிப்படியாக குறைத்து, யாருடைய துணையும் இல்லாமல் அவர்களுடைய அன்றாட பணிகளை தானே செய்து கொள்ளும் அளவிற்கு சரிப்படுத்த இயலும்.

பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்கு ஏதாவது தொந்தரவு இருப்பதாக கருதினால், முன்கூட்டியே மருத்துவரை சந்தித்து தக்க ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு டாக்டர் பரந்தாமன் சேதுபதி கூறினார்.